# கல்வி அமைச்சு - தேசிய மொழிகள் மற்றும் சமூக விஞ்ஞான கிளை

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2024
## மாதிரி வினாத்தாள்

| புவியியல் I | 22 | T | I | மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள் |
|---|---|---|---|---|
| மூன்று மணித்தியாலம் | | | | |

**அறிவுறுத்தல்கள்:**

- இவ்வினாக்கள் **மூன்று** பகுதிகளைக் கொண்டது. **பகுதி I 40** பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளதோடு அவற்றுக்கான விடைகள் இவ்வினாத்தாளிலேயே எழுதப்படவேண்டும்
- **பகுதி I** இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் **ஒரு** புள்ளி வீதம் உரித்தாகும்.
- **பகுதி II** இல் உள்ள **இரண்டு** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- **பகுதி III** இல் **நான்கு** வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.
- **பகுதி I, II ,III** ஆகியவற்றுக்குரிய விடைத்தாள்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும்.

## பகுதி I

01. இலங்கையின் 1:50,000 இடவிளக்கப்படத்தில் பொத்துவில் படப்பிரிவுடன் இணைந்து காணப்படும் படப்பிரிவு எது?

(1) யால  (3) கோமாரி  (5) கல்முனை

(2) திருகோவில்  (4) பானம  (…………)

02. புவியில் தகவல் முறைமையில் (GIS) உள்ளடங்கும் இடம்சாரா தரவாக அமையாதது

(1) தனிக்குன்றுகளின் உயரம்
(2) மகாவலி குடியேற்றத் திட்டம்
(3) இலங்கையின் அதிவேக நெடுஞ்சாலை திட்டம்
(4) நிருவாக மாவட்டங்களின் அமைவு
(5) புதிதாக இறப்பர் தோட்டங்களை அமைக்கும் திட்டம்  (………….)


03. 2015 தொடக்கம் 2024 வரையான காலப்பகுதியில் இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி வேகத்தினை காட்டுவதற்கு பொருத்தமான வரைபு வகை.

(1) சாதாரண பார் வரைபடம்
(2) பிரமிட் வரைபடம்
(3) விலகல் பார் வரைபு
(4) பிரிக்கப்பட்ட வட்ட வரைபு
(5) சாதாரண கோட்டு வரைபடம்  (………….)

04. தரவுகளை சேகரிக்கும் முறையொன்றாகவும், முழு குடியையும் பயன்படுத்தக்கூடியதுமான இரு சந்தர்ப்பங்களையும் முறையே சரியாக குறிப்பிடுவது.

(1) பிரபல்யமான தொலைக்காட்சி சேவையினை தெரிவு செய்தல் மற்றும் வணிக ஊக்குவிப்பு புள்ளிவிபரவியல்.
(2) வணிக ஊக்குவிப்பு புள்ளிவிபரவியல் மற்றும் சனத்தொகை கணக்கெடுப்பு.
(3) சாதாரண தரப் பரீட்சை மற்றும் பிரபல்யமான நடிகரை தெரிவு செய்தல்.
(4) சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் சனாதிபதி தேர்தல்.
(5) உயர்தரப் பரீட்சை மற்றும் சாதாரண தரப் பரீட்சை.  (……….)

05. பின்வரும் வரைபடத்தில் A-B, B-B மற்றும் C-C எழுத்துக்களில் காட்டப்பட்டுள்ள தரைத்தோற்ற அம்சங்களை சரியாக குறிப்பிடும் விடையை தெரிக.




(1) சரிவு சாய்வு - சுவடு - முகடு
(2) குத்துச் சாய்வு - பள்ளத்தாக்கு - முகடு
(3) மென்சாய்வு - குத்துச் சாய்வு - சமவெளி
(4) குத்துச் சாய்வு - பள்ளத்தாக்கு - சமவெளி
(5) குத்துச் சாய்வு - பள்ளத்தாக்கு – சமவெளி  (……….)

06. புள்ளி விபர நுட்பமுறைகளுள் $\bar{x} = \frac{\epsilon x}{n}$ எளிய சூத்திரத்தினை பயன்படுத்தி கணிப்பிடப்படுவது, கூட்டமாக்கப்படாத மீடிறன் பரம்பலின் இடை
(1) உத்தேச இடை.
(2) கூட்டமாக்கப்படாத மீடிறன் பரம்பலின் இடை.
(3) கூட்டமாக்கப்பட்ட மீடிறன் பரம்பலின் இடையம்.
(4) கூட்டமாக்கப்படாத மீடிறன் பரம்பலின் இடையம்.
(5) கூட்டமாக்கப்பட்ட மீடிறன் பரம்பலின் இடை. (………..)

07. பூகோள இடநிலைப்படுத்தல் முறைமை தொடர்பான மிகச் சரியான கூற்றாக அமைவது.
(1) குறிப்பிட்ட இடமொன்றின் அமைவிடத்தை சரியாக அறிந்துக் கொள்ளக்கூடிய முறைமையாகும்.
(2) எல்லா செய்மதிகளும தமக்கு கொடுக்கப்பட்டுள்ள அச்சில் மணித்தியாலத்திற்கு 22,000 கி.மீ வேகத்தில் பயணம் செய்யும்.
(3) விண்வெளியில் 24 செய்மதிகள் செயற்படுவதுடன், அவற்றுள் 07 செய்மதிகள் அவசர தேவையேற்படும் போது செயற்படும்.
(4) அனைத்து கண்டங்களிலும் கட்டுப்பாட்டு நிலையங்களை அமைத்தல்.
(5) வான்வழி மேடை, பூகோள இடநிலைப்படுத்தல் முறைமையின் முதன்மை பிரிவாகும். (……..….)

08. குறித்த ஆய்வொன்றினை நோக்காகக் கொண்டு சேகரிக்கும், நம்பகத்தன்மை கூடிய தரவாக கருதப்படுவது.
(1) அளவுசார் தரவு (2) பண்புசார் தரவு
(3) தொடர்ச்சியற்ற தரவு (4) கூட்டமாக்கப்படாத தரவு
(5) முதலாம் நிலைத் தரவு (………….)

09. 8 கிலோமீற்றர் நீளமான பாதையொன்றினை 1:25000 அளவுதிட்ட படமொன்றில் காட்டும் போது அதன் நீளம் செ.மீ ?
(1) 4 CM (2) 8 CM (3) 16 CM (4) 32CM (5) 40 CM (…………..)

10. அகலக்கோடுகளுக்கு சமாந்திரமாக பயணிக்கும் தொலையுணர்வு செய்மதிக்கு வழங்கப்படும் பெயர் யாது?
(1) புவி நிலை செய்மதி
(2) காலநிலை செய்மதி
(3) முனைவு சுற்று செய்மதி
(4) புவி நிலை சுற்றுப்பாதை செய்மதி
(5) உயர்மட்ட செய்மதி (…………)

11. புவியில் கற்கை தொடர்பில் ரிச்சட் ஹாட்சோனால் முன்வைக்கப்பட்ட வரைவிலக்கணத்தினை சுருக்கமாகவும் மிகச்சரியாகவும் குறிப்பிடும் விடையினை தெரிவு செய்க
(1) புவி மேற்பரப்பின் பூகோள நிலைமைகள் காலரீதியாக மாற்றமடைகின்றன.
(2) நிலத்தோற்றங்களின் பல்லினத்தன்மையை அடிப்படையாகக் கொண்டே மானிட நடவடிக்கைகள் கட்டியெழுப்பப்படுகின்றன.
(3) மனிதனுக்கும் சுற்றாடலுக்கும் இடையிலான இடைதொடர்புகள் தொடர்பான கற்கையே புவியியலாகும்.
(4) பிரதேச மற்றும் கால அடிப்படையில் புவியியல் நிலைமைகளை பற்றி கற்பதாகும்.
(5) புவி மேற்பரப்பின் பரப்பு ரீதியான வேறுபாடுகளைக் கற்றலாகும். (………….)

12. புவியில் பௌதீக மாற்றங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதோடு, அவற்றில் மனித தலையீடுகள் ஏற்படுத்தும் விளைவாக அமைவது,
(1) பௌதீக செயற்பாடுகள் அனைத்தும் துரிதப்படுத்தப்படுதல்.
(2) பௌதீக செயற்பாடுகளின் தீவிரமாக மாற்றமடைதல்.
(3) பௌதீக நிலத்தோற்றத்தில் மாற்றங்கள் ஏற்படாமை
(4) மனித செயற்பாட்டினால் உயிர்கோளம் மாற்றமின்றி செயற்படுதல்.
(5) மானிட நிலத்தோற்றத்தினை உருவாக்குவதற்காக பௌதீக சூழல் முழுமையாக மாற்றியமைக்கப்படுதல்.
(………….)

13. எரிமலை செயற்பாடுகளின் விளைவாக உருவாகும் முதன்மை பாறைகளை மாத்திரம் கொண்ட விடைத் தொகுதி,
(1) மணற்கல், தீப்பாறை
(2) களி, சலவைக் கல்
(3) குவாட்சைட், தொலமைட்
(4) கிரனைட், தயோரைட்
(5) மாக்கல், களி (………….)

14. அமில தீப்பாறையின் பண்பினைக் காட்டும் விடையாக அமைவது
(1) இரும்பு 20% – 25% வரையில் காணப்படுதல்.
(2) சிலிக்கா 45% விட குறைவாக காணப்படுதல்
(3) கருமை நிறமாக காணப்படும்.
(4) இரும்பு மற்றும் மக்னீசியம் காணப்படுதல்.
(5) திரவ நிலையில் காணப்படுதல். (………….)

15. மண்ணின் படையடைப்பில் கனியங்களை உறிஞ்சித் தகக்வைக்கும் மட்படை எது?

(1) O படை (3) B படை (5) R படை

(2) A படை (4) C படை (.........)

16. பின்வரும் தரைத்தோற்ற நிலவுருவங்களை உருவாக்கும் புறவிசை செயற்பாடுகளை குறிக்கும் சரியான விடைத்தொகுதி.

A – வட்டக்குகை ஏரி B – அலை வெட்டிய மேடை C – மேசா / பியூட்

(1) A - காற்று B - பனிக்கட்டி C - ஓடும் நீர்

(2) A - தரைநீர் B - கடலலை C - பனிக்கட்டி

(3) A - ஓடும் நீர் B - பனிக்கட்டி C - காற்று

(4) A - பனிக்கட்டி B - கடலலை C - காற்று

(5) A - பனிக்கட்டி B - காற்று C – கடலலை (..........)

17. நீரியல் வட்டத்தின் பிரதான படிமுறைகளுள் ஒன்று

(1) உக்கலடைதல் செயற்பாடு

(2) பனிக்கட்டி உருவாக்கம்

(3) புவி கதிர்வீச்சு

(4) சூரிய கதிர்வீச்சு

(5) ஆவியாக்கம் (..........)

18. கெப்பனின் காலநிலைப் பாகுபாட்டில் உலர் காலநிலை வகையின் (B) முக்கிய பண்பாக அமைவது.

(1) வருடாந்த மழைவீழ்ச்சி 70 மி.மீற்றரை விட குறைவாகும்.

(2) மழைவீழ்ச்சியானது ஆவியாக்கத்தை விட அதிகமாகும்.

(3) சகல மாதங்களிலும் 600 மி.மீற்றரை விட அதிகமான மழை கிடைக்கப்பெறுதல்.

(4) பருவக்காற்று மழை அதிகமாக கிடைக்கப்பெறுதல்.

(5) சகல மாதங்களிலும் 30 மி.மீற்றரை விட அதிகமான மழை வீழ்ச்சி கிடைக்கப்பெறுதல். (.........)

19. மத்திய மலை நாட்டின் மேற்கு சாய்வு பிரதேசங்களில் உச்ச மழைவீழச்சியை பெரும் பிரதேசம் எது?

(1) நக்கில்ஸ்

(2) மாலிபொட

(3) பதுளை

(4) எகலியகொட

(5) நுவரெலியா (..........)

20. காலநிலை மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் புறச் செயற்பாடொன்றாக அமைவது,

(1) பச்சை வீட்டு விளைவு (2) சமுத்திர நீரோட்டங்கள்

(3) சூரிய கரும்புள்ளி (4) எரிமலை வெடிப்பு

(5) எல்நினோ-லாநினோ (...........)

21. குறித்த ஒரு பகுதியில் கிடைக்கப்பெறும் நீரின் அளவை விட அதிகமாக நீரைப் பயன்படுத்துவை.த குறிப்பது.

(1) நீரை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்

(2) நீரை வீண்விரயம் செய்தல்

(3) மிதமிஞ்சிய நீர் பாவனை

(4) நீர் மாசடைதல்

(5) நீர் மீள் சுழற்சி (............)

22. வடவரைக்கோளத்தில் உள்ள கண்டங்களில் மேற்கிலிருந்து கிழக்கு வரை பரவியுள்ள உயிர்திணிவு வகையாக காணப்படுவது.

(1) சவன்னா

(2) மத்தியதரைக் காடுகள்

(3) இடை வெப்பவலயக் காடுகள்

(4) துந்திராக் காடுகள்

(5) தைக்கா காடுகள் (............)

23. மழைவீழ்ச்சி பெறும் காலப்பகுதியில் நீரினால் மூழ்கும், நீர் தேங்குகின்ற தாழ்நிலங்களை அண்டி காணப்படும் புல் சூழல் தொகுதி.

(1) வில்லு (2) ஈரப் பத்தனைப் புல் நிலங்கள்

(3) தலாவைப் புல் நிலங்கள் (4) வரண்டப் பத்தனை புல் நிலங்கள்

(5) ஈர நிலங்கள் (............)

24. உலகில் காட்டுத் தீ பாதிப்பு அதிகளவு இடம் பெறக்கூடிய மற்றும் இடைவெப்ப வரண்ட காலநிலை நிலவுகின்ற பிரதேசம்.

(1) வெனிசுவேலாவின் லாவோஸ் (2) ஆபிரிக்காவின் சவன்னா

(3) பிரேசிலின் கம்போஸ் (4) கனடாவின் அல்பர்டா

(5) அமேசன் காட்டுப் பகுதி (…………..)

25. ஐக்கியநாடுகளின் சூழல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் (UNEP) "சூழல் மற்றும் கைத்தொழில் தொடர்பான செயலகம் அமைந்துள்ளது.

(1) ஜெனிவா (2) பாரிஸ் (3) பேர்ன் (4) பேங்கொக் (5 )மெக்சிக்கோ சிட்டி

(………….)


26. 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட சனத்தொகை, 15 வயதிற்கு குறைவான சனத்தொகையின் வீதமாக காட்டப்படுவது.

(1) சனத்தொகை வளர்ச்சி
(2) பால் வீதம்
(3) தங்கிவாழ்வோர் சுட்டி
(4) ஊழியர் படை
(5) முதுமையடைதல் சுட்டி (…………..)

27. 2013 ஆம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்பின் படி இலங்கையில் உயரிய பிறப்பு விகிதத்தினை கொண்ட மாவட்டங்களை ஒழுங்குமுறையில் காட்டும் விடைத்தொகுதியாக அமைவது.

(1) கொழும்பு, கம்பஹா, மட்டக்களப்பு
(2) கிளிநொச்சி, அம்பாறை, புத்தளம்
(3) மொனராகலை, கிளிநொச்சி, மட்டக்களப்பு
(4) அம்பாந்தோட்டை, புத்தளம், அம்பாறை
(5) முல்லைத்தீவு, கம்பஹா, கொழும்பு (…………..)

28. படத்தில் காட்டப்பட்டுள்ள சனத்தொகை கூம்பிற்குரிய பண்புகளை சரியாக காட்டும் விடையினை தெரிவு செய்க.



(1) உயர் பிறப்பு வீதம் - குறைந்த இறப்பு வீதம் - குறைந்த ஆயுள் எதிர்பார்ப்பு
(2) பிறப்பு இறப்பு வீதம் குறைவு - குறைந்த ஆயுள் எதிர்பார்ப்பு
(3) பிறப்பு இறப்பு வீதம் குறைவு - உயர் ஆயுள் எதிர்பார்ப்பு
(4) உயர் பிறப்பு வீதம் - குறைந்த இறப்பு வீதம் - உயர் ஆயுள் எதிர்பார்ப்பு
(5) உயர் பிறப்பு,இறப்பு வீதம் - குறைந்த ஆயுள் எதிர்பார்ப்பு (………….)

29. கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் கிராம-நகர குடியிருப்புக்களின் பண்புகளுடன் தொடர்புடைய சரியான கூற்றினைத் தெரிவு செய்க.

(1) கிராமத்திலிருந்து நகரத்திற்குத் தொழில் புரிய வருவோரால் கிராம-நகர குடியிருப்புகள் உருவாக்கப்படுகின்றன.
(2) நகரத்தில் கைவிடப்பட்ட நிலங்களே கிராம-நகர வலயங்களாக மாறுகின்றன.
(3) சேரிகள், குடிசைகள், குறைந்த வசதியுடைய வீடுகள் கிராம நகர குடியிருப்புக்களாக தோற்றம் பெறுகின்றன.
(4) நகரப்புர மக்களால் நகரின் நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்காக உருவாக்கப்பட்ட வலயமாகும்.
(5) கிராமம் மற்றும் உப நகரங்களுக்கு இடையே விருத்தியுற்று வரும் குடியிருப்பு வகை கிராம நகர குடியிருப்பாகும். (…………..)

30. 2014 ஆம் ஆண்டு உலகின் உயர் நகராக்கம் கொண்ட முதல் பத்து நாடுகளில் மத்திய கிழக்கு மற்றும் தென் அமெரிக்க வலய நாடுகளை மாத்திரம் கொண்ட சோடியினை தெரிவு செய்க.

(1) ஓமான், ஆர்ஜன்ரீனா
(2) கட்டார், பிரேசில்
(3) சவுதி அரேபியா, வெனிசுவெலா
(4) கட்டார், உருகுவே
(5) கட்டார், கொலம்பியா (………….)

31. இலங்கையின் நகரமயமாக்கத்துடன் தொடர்புடைய சமூக, பொருளாதார பிரச்சினைகளை தீர்க்கும் போது அவதானம் செலுத்த வேண்டிய முக்கிய துறை எது?

(1) குடியிருப்பு பரம்பலை விருத்தி செய்தல்.
(2) பெருந்தெருக்களை அபிவிருத்தி செய்தல், பராமரித்தல்.
(3) நகர மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்வடையச் செய்தல்.
(4) மாநகரங்களை அபிவிருத்தி செய்தல்.

(5) நகரின் குற்றச்செயல்களை கட்டுப்படுத்தல். (…………..)

32. மரபணுத் தொழிநுட்பத்தின் காரணமாக சூழலுக்கு ஏற்படும் பாதிப்பினை சரியாக காட்டும் விடையினைத் தெரிவு செய்க.
(1) உயிர்ப்பல்வகைமைக்கு பாதிப்பு ஏற்படல்.
(2) விளைச்சலில் குறைவு ஏற்படல்.
(3) வேறுபட்ட சூழல் நிலைமைகளுக்கு ஏற்ற தாவரங்கள், உயிரிணங்கள் தோற்றமடைதல்.
(4) காலநிலை மாற்றம் ஏற்படுதல்.
(5) இரசாயனங்களினால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறைவடைதல். (…………..)


33. பசுமை புரட்சியினூடாக கலப்பு விதை தொழினுட்பத்தின் மூலம் ஆபிரிக்க பிரதேசத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட நெல் இனம் எது?
(1) நெறிக்காஸ் (2) BG 407 H (3) IR 36 (4) IR 8 (5) TN-1
(…………)

34. இலங்கையில் மத்திய மாகாணத்திற்குரிய இரு பொருளாதார மத்திய நிலையங்களை கொண்ட விடையினைத் தெரிவு செய்க.
(1) தம்புள்ளை-மீகொட
(2) தம்புள்ளை-கெப்பட்டிபொல
(3) கெப்பட்டிபொல, தம்புத்தேகம
(4) வெலிசறை-தம்புள்ளை
(5) நாராஹேன்பிட்டி, மீகொட (…………)

35. சக்திவளங்களை அடிப்படையாகக் கொண்டு கைத்தொழில் நிலையங்களை அமைக்கும் போது அவதானம் செலுத்த வேண்டிய முக்கிய அம்சம் யாது?
(1) சக்தி வளங்களின் இருப்பு
(2) காலரீதியாக சக்தி வளங்கள் மாற்றமடையும் தன்மை.
(3) போக்குவரத்திற்கான வசதிகள்
(4) சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்
(5) மாற்று சக்தி வளத்திற்கான வாய்ப்புக்கள் (………….)

36. இல்மனைட் கனியம் அதிகளவில் பயன்படுத்தப்படுவது,
(1) இரும்பு உருக்குவதற்காக
(2) நிறப்பூச்சி தயாரிப்பிற்கு
(3) டைட்டேனியம் தயாரிப்பிற்கு
(4) உர தயாரிப்பிற்கு
(5) வெடிமருந்து உற்பத்திக்கு (..………)

37. பின்வரும் இலங்கை வரைபடத்தில் சீனி மற்றும் சீமெந்து ஆகிய இரு கைத்தொழில்களும் ஒருங்கே இடம்பெறும் மாவட்டத்தினைக் காட்டும் விடையினை தெரிவு செய்க.
(1) A (3) C (5) E
(2) B (4) D
(…………)





38. துணிகர (சாகச சுற்றுலா) சுற்றுலாவை நோக்காக கொண்ட சுற்றுலா பிரதேசமொன்று
(1) கித்துல்கல (3) சிங்கராஜ (5) பூந்தல
(2) கதிர்காமம் (4) நிலாவெளி
(…………)

39. பூகோளமயமாதல் என்பதற்கான மிகச் சரியான வரைவிளக்கணம் பின்வருவனவற்றுள் எது?
(1) தகவல் தொடர்பாடல் மூலம் உலகை இணைத்தல்
(2) சகல பூகோள செயற்பாடுகளையும் சிக்கலுக்குரியதாக மாற்றுதல்
(3) அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் ஒன்றாக செயற்படல்
(4) அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு சகல நாடுகளும் ஒன்றாக செயற்படல்
(5) உலகம் பல்வேறு துறைகளினூடாக தொடர்புகளை மேற்கொள்ளும் ஒரு செயன்முறையாகும்.(………..)

40. படத்தில் A B எனும் எழுத்துக்களின் மூலம் பிராந்திய அமைப்புகள் இரண்டின் இலட்சிகைள் காட்டப்பட்டுள்ளன. இவை உருவாக்கப்பட்ட நகரங்கள் இரண்டினையும் சரியாக காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

(1) A – ஜகார்த்தா B - மாலே
(2) A – பேங்கொக் B - டாகா
(3) A – டாக்கா B - பேங்கொக்
(4) A - மனிலா B – காபுல்
(5) A - பேங்கொக் B – புது டில்லி (…………)




❋❋❋❋

# கல்வி அமைச்சு - தேசிய மொழிகள் மற்றும் சமூக விஞ்ஞான கிளை

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை- 2024

**புவியியல் I** | **22** | **T** | **I**

**அறிவுறுத்தல்கள்**

- **பகுதி II** இல் உள்ள **இரண்டு** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- **பகுதி III** இல் **நான்கு** வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **இரண்டு** வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.
- இவ்வினாத்தாள்களுக்கு விடையளிப்பதற்காக இலங்கையின் 1:50000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படம் மற்றும் உலகப் புறவுருவப் படம் என்பன வழங்கப்படும்.

### பகுதி II

**1.** இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1:50000 அளவுத்திட்டத்திலமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்கு தரப்பட்டுள்ளது. அப்படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

i. **A – A** இனால் காட்டப்பட்டுள்ள **பௌதீக அம்ச**த்தினை பெயரிடுக? (1 புள்ளி)

ii. **B** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள **நிருவாக எல்லை**யினை பெயரிடுக? (1 புள்ளி)

iii. **C** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள பிரதேசத்தில் பரம்பியுள்ள **இயற்கை தாவர** வகையை பெயரிடுக? (1 புள்ளி)

iv. படப்பிரதேத்திசத்தின் **D,E,F** எழுத்துக்களினால் காட்டப்பட்டுள்ள இடங்களுள் **மிகவும் உயரமான** இடத்தினை காட்டும் எழுத்தினை குறிப்பிடுக.? (1 புள்ளி)

v. நாற்பக்கல் **G** இனுள் அமையப்பெற்றுள்ள சேவை வழங்கும் நிலையங்கள் **நான்கினை** பெயரிடுக? (2 புள்ளிகள்)

vi. **B3** பிரதான வீதியினுடைய துாரத்தினை கிலோ மீற்றரில் தருக. (2 புள்ளிகள்)

vii. படப்பிரதேசத்தின் குடியிருப்பு பாங்குகளில் காணப்படக்கூடிய பண்புகள் **மூன்றினை** பெயரிடுக. (3 புள்ளிகள்)

viii. J-K வரையிலான குறுக்கு வெட்டுமுகத்தினை வரைக. (4 புள்ளிகள்)

ix. படப்பிரதேசத்தின் பௌதீக அம்சங்களுக்கும், பயிர்ச்செய்கைகளுக்கும் இடையிலான தொடர்புகளை விளக்குக (5புள்ளிகள்)

**2.** தரப்பட்டுள்ள உலகப்படத்தில் வழமையான குறியீடுகளையும், நிறங்களையும் பயன்படுத்தி **பின்வருவனவற்றை குறித்து பெயரிடுக**?

i. மிசுரி மிசிசிப்பி நதி

ii. அட்டகாமா பாலைவனம்

iii. தாய்வான்

iv. டொங்கா அகழி

v. மலாவி ஏரி

vi. அபினைன் மலைதொடர்

vii. குக் தொடுகடல்

viii. பெரன்டிஸ் கடல்

ix. 2024 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் நடைப்பெற்ற நகரம்.

x. 2024 மே மாதம் விமான விபத்தில் மரணமடைந்த சனாதிபதியின் நாடு (10 புள்ளிகள்)

## பகுதி III

**3.** i. இரண்டாம் நிலைத் தரவு மூலங்கள் **மூன்றினை** பெயரிடுக (03 புள்ளிகள்)

ii. இடவிளக்கப்படம் மற்றும் கருப்பொருள் படம் என்பவற்றின் பயன்பாடுகள் **இவ்விரண்டு** தருக. (04 புள்ளிகள்)

iii. தரவுகளை ஒழுங்கமைப்பதற்காக பயன்படுத்தப்படும் **இரு** நுட்பமுறைகளை குறிப்பிட்டு அவற்றினால் கிடைக்கும் நன்மைகள் ஒவ்வொன்றை குறிப்பிடுக. (04 புள்ளிகள்)


iv. புவியியல் தகவல் தொடர்பாடலில் புள்ளிவிபர நுட்பமுறைகள் பின்வரும் துறைகளில் பங்களிக்கும் விதத்தினை தெளிவுபடுத்துக.

(a) வானிலை எதிர்வு கூறல்

(b)அபிவிருத்தி திட்டங்கள் (04 புள்ளிகள்)

**4.** i. தொலையுணர்வு தொழினுட்பம் (Remote Sensing) என்பதனை வரையறுக்குக. (02 புள்ளிகள்)

ii. தொலையுணர்வு தொழினுட்பத்தில் பயன்படுத்தப்படும் **மூன்று** மேடைகளை குறிப்பிட்டு, அவற்றிற்கு **ஒவ்வொரு** உதாரணம் தருக. (03 புள்ளிகள்)




iii .பின்வரும் வரைபடத்தில் **A** மற்றும் **B** எழுத்துக்களினால் காட்டப்படும் தொழிற்பாடுகளை சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

iv. இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளில் தொலையுணர்வு தொழினுட்பம் பயன்படுத்தப்படும் **மூன்று** சந்தர்ப்பங்களை. விளக்குக (06 புள்ளிகள்)

**5.** 2022 ஆம் ஆண்டில் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி தொடர்பான தரவுகள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது. அத்தரவுகளை பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

**அட்டவணை-01 இலங்கையின் தேயிலை ஏற்றுமதிகள் (கி.கி ஆயிரங்களில்) - 2022**

| வகுப்பாயிடை (கி.கி ஆயிரங்களில் | மீடிறன் |
|---|---|
| 0 - 1999 | 08 |
| 2000 - 3999 | 06 |
| 4000 - 5999 | 03 |
| 6000 - 7999 | 05 |
| 8000 - 9999 | 03 |
| 10000 - 11999 | 03 |
| 12000 - 13999 | 02 |

**மூலம்:- இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை - 2022**

i. மேலே அட்டவணை-01 இல் தரப்பட்டுள்ள தரவுகளை பயன்படுத்தி **திரட்டு சதவீத மீடிறன் வளையி (ஒகிவ்)** ஒன்றினை அமைக்குக. (08 புள்ளிகள்)

ii. உம்மால் அமைக்கப்பட்ட திரட்டு சதவீத மீடிறன் வளையி இனை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் தேயிலை ஏற்றுமதியில் அவதானிக்கக்கூடிய **இரண்டு** போக்குகளை விவரிக்குக. (04 புள்ளிகள்)

iii. தரவு பகுப்பாய்வில் திரட்டு சதவீத மீடிறன் வளையி இன் பயன்பாடுகள் **மூன்றினை** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

**6.** 2022 ஆம் ஆண்டு மத்திய வங்கி ஆண்டறிக்கையின் படி இலங்கையின் பிரதான இறக்குமதி தொடர்பான தரவுகள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது. அத்தரவுகளை பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

**அட்டவணை-01 இலங்கையின் இறக்குமதிகள் (மெற்றிக் தொன் ஆயிரங்களில்) – 2022**

| ஆண்டு / இறக்குமதிகள் | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|
| கோதுமை | 1297 | 1359 | 1484 | 1307 | 583 |
| சுத்திகரிக்கப்படாத எண்ணெய் | 1674 | 1842 | 1404 | 1182 | 649 |
| சீனி | 645 | 556 | 683 | 582 | 460 |
| உரம் | 861 | 707 | 952 | 412 | 363 |

**மூலம்:- இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை - 2022**

i. மேலே அட்டவணை-01 தரப்பட்டுள்ள தரவுகளை கொண்டு **பல்பார் வரைபொன்றினை (கூட்டுபார்)** அமைக்குக. (08 புள்ளிகள்)

ii. உம்மால் அமைக்கப்பட்ட வரைபினை அடிப்படையாகக் கொண்டு 2018 தொடக்கம் 2022 வரையான இலங்கையின் இறக்குமதிகளில் அவதானிக்கக் கூடிய **மூன்று** போக்குகளை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

iii. பல்பார் வரைபு மற்றும் பல் கோட்டு வரைபு இரண்டிற்குமிடையிலான **இரு** ஒற்றுமைகளையும், **இரு** வேற்றுமைகளையும் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)


❋❋❋

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை-2024**

**வினா இலக்கம் - 2**



## கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை-2024




1:50,000